(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(14).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 ஒக்டோபர் 29 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 நவம்பர் 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2013),— 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2014),— 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2014 ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2019.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.02.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் (2013 மற்றும் 2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 மற்றும் 2014.12.31 ஆம் திகதிகளில் முடிவடைந்த வருடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2018.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வெகுசன ஊடக அமைச்சர்,— த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் ஆண்டறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.06.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டிற்கான த அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட்டின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக்கூற்று (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக்கூற்று அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*

வெகுசன ஊடக அமைச்சர்,— செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2019.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான 2016 ஆம் ஆண்டுக்கான செலசினே ரூபவாஹினி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2020.01.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2021 நவம்பர் 13, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

12/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள்;

(ii) அவற்றில் எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவு உள்ளடங்காவிடின் அதற்கான காரணங்கள்;

யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணம் வழங்கும் கட்டம் II இன் கீழ் நிவாரணம் வழங்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) அதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைவாக தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2018 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணம் வழங்கும் கட்டம் II இன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றில் இறுதியாக செயற்படுத்தப்பட்ட செல்லுபடியாகும் சுற்றறிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிவாரணம் வழங்குவதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை என்பன ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் அமைவாக தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) NDR/2018/03 சுற்றறிக்கைக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

767/2020

கௌரவ சாந்த பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பயிரிடக்கூடிய ஏராளமான பயிர் வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அரிசி, சோளம், பயறு, கௌப்பி, இஞ்சி மற்றும் மஞ்சள் போன்றவற்றின் வருடாந்த தேவை இன்றளவில் கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் தேவை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட பயிர்களை இலங்கையில் பயிரிடுவதற்கு வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1590/2021

கௌரவ விஜித ஹேரத்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடுவளை, ஹோக்கந்தர வடக்கு பிரதேசத்தின் பல்வேறு கிராமங்களிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்பு காலை வேளைகளில் பாதிக்கப்படுவதோடு அது மு.ப 10.00 மணி அளவிலேயே இயல்பு நிலைக்கு வருகின்றதென்பதையும், பி.ப 5.00 மணியளவில் மீள தடைப்படும் நீர் இணைப்பு இரவு 9.00 மணிக்குப் பின்னரே இயல்பு நிலைக்கு வருகின்றதென்பதையும்;

(ii) விடுமுறை நாட்களில் அநேகமான சந்தர்ப்பங்களில் பகல் முழுவதிலும் நீர் கிடைப்பதில்லை என்பதையும்;

(iii) குறிப்பாக ஒரு மாடியையேனும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு இப்பிரச்சினை கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்;

(iv) இவ் விடயம் தொடர்பாக நீர் வழங்கல் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை தீர்வெதுவும் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட பிரதேச மக்களுக்கு நாள் முழுவதும் தொடர்ச்சியாக நீர் கிடைக்கும் வகையில் இப் பிரச்சினையை துரிதமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1908/2021

கௌரவ ஜகத் புஷ்பகுமார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1997/2021

கௌரவ பைஸால் காசிம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994-2014 අමප/16/0323/734/002 மற்றும் 2016.03.02 ஆம் திகதிய அமைச்சரவை த் தீர்மானத்தின் படியும் ஓய்வுபெற்ற உதவி ஆசிரியை திருமதி எம்.எஸ்.எஸ்.ரலீனா (ஓய்வூதிய இலக்கம் 01-1020485 மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் 498042872X) அவர்கள் விளிக்கப்பட்ட, காலி வலயக் கல்விப் பணிப்பாளரின் இலக்கம் ගා/කලාප/ශ.ආ./2/5 විශ්‍රාම மற்றும் 2017.05.29 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படியும் 2005.11.01 ஆம் திகதியில் திருமதி. ரலீனா அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள ஏற்றத்திற்கான பெறுமதியின் அடிப்படையில் (645 x 2 = 1,290) ஓய்வூதியம் கணிப்பிடப்படும்போது அவருக்குக் கிடைக்க வேண்டிய மொத்த நிலுவைத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தீர்மானத்திற்கமைவாக ரூ.198,660/= எனும் சம்பளப் படிமுறைக்கான பெறுமதியின் அடிப்படையில் 2005.11.01 தொடக்கம் 2018.08.01 வரையிலான 154 மாதங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவை ஓய்வூதியத்தினைத் தயாரிக்கும்போது தவறு ஏற்பட்டுள்ளதாக திருமதி. ரலீனா அவர்கள் தொடர்புடைய நிறுவனங்களை விழிப்பூட்டியுள்ளார் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், திருமதி. ரலீனா அவர்களின் சம்பள ஏற்றங்களை சரியாகக் கணக்கிட்டு அவருக்கு உரித்தான நிலுவை ஓய்வூதியத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 15, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

778/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக அகத்திமுறிப்பு அளக்கட்டு கிராமத்தில் அமைந்துள்ள காணி ஒதுக்கப்பட்டு அதற்கான காணி உரிமங்கள் அப்போதைய பிரதம அமைச்சரினால் ஏற்புடைய குடும்பங்களுக்கு 2014.10.12 ஆம் திகதியன்று கிளிநொச்சியில் வைத்து வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) காணி ஆணையாளர் நாயகத்தின் 2013.07.02 ஆம் திகதிய என்பி/28/04/03/169 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுள் இன்றளவில் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமப்பத்திரதாரிகளுள் ஏற்கனவே காணிகள் கிடைத்துள்ள உரிமப்பத்திரதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) இதுவரை காணிகள் கிடைக்காத உரிமப்பத்திரதாரிகளுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(vi) காணி உரிமங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படக் காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

783/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1989-1990 காலப்பகுதியில் அரசாங்க ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆசிரியர்கள் ஓய்வுபெறும் கட்டத்தை அண்மித்துள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் ஆசிரியர் சேவையில் பெருமளவிலான வெற்றிடங்கள் ஏற்படுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இந்த நிலைமையை சமநிலைப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

881/2020

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மீன் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) அத்தேவையில் உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 1982 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட மீன் உற்பத்தியானது இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த நிலைமை முடிவடைந்து தற்போது 11 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் 1982 ஆம் ஆண்டு அம்மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மீன் அறுவடை இன்னும் கிடைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் இதுவரை மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) கடந்த 15 வருட காலப்பகுதியில் ஏனைய மாகாணங்களில் நிர்மாணிக்கப் பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்திற்கான நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த உதவியின் தன்மை மற்றும் அந்த உதவிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் வழங்கும் கடன் தொகைகளைக் கொண்டு இத்துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) அதன்மூலம் கிடைக்கப்படும் மேலதிக அனுகூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

938/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதையும்;

(ii) அத்திட்டத்தின் கீழ் கொழும்பு கல்வி வலயத்தில் அமைந்துள்ள சுசமயவர்தன வித்தியாலயம், புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயம், மகாபோதி வித்தியாலயம், அனுருத்த மகளிர் வித்தியாலயம், புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம் (ஆரம்ப பிரிவு), முத்துவெல்ல இந்து வித்தியாலயம் மற்றும் கொ/முகத்துவாரம் ஆனந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அப்பணிக்காக கடந்த அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு - 12, ஹமீத் அல் ஹுசைனி வித்தியாலயத்தில் கட்டிடமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1670/2021

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவின் சாலியவெவ இலக்கம் 638 – ரணவராபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் சட்டவிரோதமாக சரளை அகழ்வு இடம்பெறுகின்றதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சட்டவிரோத சரளை அகழ்வைத் தடுப்பதற்காக அமைச்சு இன்றளவில் மேற்கொண்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்ற நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 நவம்பர் 16, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

274/2020

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "ஆயுர்வேத சாஸ்த்ரீ" பாடநெறியை பயில்வதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் யாவை;

(ii) மேற்படி பாடநெறி நடாத்தப்படுகின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது இப்பாடநெறியைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடநெறிக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதையும்;

(ii) பட்டப்பாடநெறிக்கு ஒப்பான மேற்படி பாடநெறியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் காரணமாக இப்பாடநெறியானது டிப்ளோமா பாடநெறியின் நிலைக்கு தாழ்த்தப்பட்டுள்ளதாகவும்;

(iii) மேற்படி பாடநெறியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) "ஆயுர்வேத சாஸ்த்ரீ" பாடநெறிக்கு பட்டப் பாடநெறியின் அந்தஸ்தை மீளளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், மேற்படி பட்டதாரிகளுக்கு ஏனைய ஆயுர்வேத வைத்தியர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(iii) மேற்படி பாடநெறிக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்வதை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா;

(iv) மேற்படி பாடநெறியை நிறுத்துவதற்கு அரசாங்கம் கொள்கைரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

646/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொச்சிபொதான வாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்கு தெமட்ட வாவியில் இருந்து நீரேந்துக் கால்வாயொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக மேற்படி கால்வாயின் இருமருங்கிலும் அமைந்துள்ள வீடுகளுக்குப் பிரவேசிப்பதற்காக கால்வாய்க்கு குறுக்காலான பாதைகளை நிர்மாணிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி கால்வாயில் நீர் வழிந்து செல்வதில்லை என்பதுடன், இதன் நிர்மாணப்பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கால்வாய்க்கான நிர்மாணக் கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்தச் செலவினம் யாது;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் நிறைவேறியுள்ளனவா;

(iv) ஆமெனில், மேற்படி கால்வாயின் ஊடாக இன்றளவில் விடுவிக்கப்படும் நீரின் கொள்ளளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

802/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் கரச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம் எனும் பெயரில் பாடசாலையொன்று அமைந்துள்ளதென்பதையும்;

(ii) அப்பாடசாலைக்கு புதியதோர் கேட்போர் கூடத்தை அமைப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்படாத காரணத்தால் கேட்போர் கூடத்தின் நிருமாணப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கீட்டினை மேற்கொண்ட அமைச்சு யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்கீட்டினை விடுவிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணியை முழுமையாக நிறைவுசெய்வதற்கு தேவையான பணத்தொகை எவ்வளவென்பதையும்,

‘ (ii) இவ்விடயத்திற்கு நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ளும் திகதி யாதென்பதையும்;

(iii) அதன் நிர்மாணப் பணியை பூர்த்திசெய்து அதனை மாணவர்களின் பாவனைக்கு வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1017/2020

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் 'ஐ-ரோட்' கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் மேற்குறித்த கருத்திட்டத்தின் மூலம் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அபிவிருத்தி செய்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(ii) மேற்படி வீதிகளில் இன்றளவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மக்கள் உடைமைக்கு கையளிக்கப்பட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

என்னவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாத வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1403/2021

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளில் நிறைவு செய்யப்பட்ட பகுதியின் நீளம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதனை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டிருந்தவாறு மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற இடங்களில் ஏலவே திட்டமிடப்பட்டவாறு தூண்கள் மீது இந்த சாலை நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) திட்டமிடப்பட்டவாறு இன்றளவில் இந்த சாலையின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 17, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

246/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் மற்றும் பால் சார் உற்பத்திகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பால் மற்றும் பால் சார் உற்பத்திகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பால் மற்றும் பால் சார் உற்பத்திகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பால் மற்றும் பால் சார் உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

632/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையும் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள தெஹிஅத்தகண்டிய வைத்தியசாலையும் மாகாண அமைச்சின் மூலம் ஒரே சமயத்தில் தரமுயர்த்தப்பட்டவை என்பதையும்;

(ii) தெஹிஅத்தகண்டிய வைத்தியசாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை இதுவரையிலும் மாகாண அமைச்சின் கீழேயே இருக்கின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரையிலும் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் மனித மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை நிலவுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

735/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பிரதான மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சாரத்தின் அளவு மெகா வொட்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1086/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேசான் ஜயவர்தன,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் (UNHCR) ஊடாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து இலங்கைக்கு வருகைதந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி அகதிகள் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை;

(iii) மேற்படி அகதிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் வசதிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏனைய நாடுகளின் அகதிகளை பொறுப்பேற்பதன் காரணமாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்கு பொறுப்பினை ஏற்க நேரிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா?

(ii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1280/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மிளகு அறுவடை மெட்ரிக் டொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதிகப்படியாக மிளகு அறுவடை செய்யும் மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்தின் வருடாந்த மிளகு அறுவடை மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிளகு தவிர்ந்த வேறு வகையான வாசனைத் திரவியங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாசனைத் திரவியத்தின் வருடாந்த தேவைப்பாடு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படுகின்ற வாசனைத் திரவியங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 19, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

312/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பாக அமைச்சுக்குக் கிடைத்துள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றுக்கு மத்தியில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு மத்தியில் இன்றளவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்கள் தனித்தனியாக யாவை;

(v) இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்களை துரிதமாக ஆரம்பிப்பதற்கு அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

583/2020

கௌரவ வேலு குமார்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் தெல்தொட்டை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகுச் சொந்தமான போபிட்டிய தோட்டத்தின் ஒரு பிரிவாக மாவுசா பிரிவு அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாவுசா பிரிவுக்கான நிலப்பரப்பு ஹெக்டெயர்களில்;

(ii) அதில் தற்போது பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பில் தற்போது பயிரிடப்படாமல் கைவிடப்பட்டுள்ள நிலப்பரப்பு;

எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி போபிட்டிய தோட்டத்தின் மாவுசா பிரிவில் காணப்படுகின்ற லயங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றிலுள்ள லயன் அறைகளின் எண்ணிக்கை;

(ii) அந்த வலயங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை;

எத்தனையென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி லயன் வீட்டுத் தொகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு தனி வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்காக காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

990/2020

கௌரவ ரோஹன பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் உள்நாட்டு பெரிய வெங்காயம் உற்பத்தியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி அளவு ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பெரிய வெங்காயம் உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1431/2021

கௌரவ உத்திக பிரேமரத்ன,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் ஹபரண நகரை மையப்படுத்தி சுற்றுலா வலயமொன்று நிறுவப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வலயத்துக்குரிய காடுகளையும் அந்த வலயத்தில் நடமாடும் காட்டு யானைகளையும் பாதுகாக்கும் வகையில் மேற்படி சுற்றுலா வலயத்தில் பௌதீக அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கு சாத்தியகூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறான ஆய்வொன்றின் மூலம் முறை சார்ந்ததாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் மேம்படுத்தப்பட்ட சுற்றுலா வலயமாக ஹபரண நகரை அபிவிருத்தி செய்வதற்கு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1734/2021

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் பிரசித்தமான மோட்டார் வாகன பந்தய வீரரொருவரால் பணம் செலுத்தப்பட்டு, சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையூடாக ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியின் பெயர் யாதென்பதையும்;

(ii) அதன் பின்னர் மேற்படி நிகழ்ச்சித்தொடருக்காக சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினால் மேற்குறிப்பிட்ட நபருக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகவும் குறித்த நபருக்குச் செலுத்தப்பட்ட தொகையும், ஒட்டு மொத்த நிகழ்ச்சிகளுக்காக குறித்த நபருக்கு செலுத்தப்பட்ட தொகையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காலப்பகுதியில் “அனோமாஸ் கிச்சன்” எனும் நிகழ்ச்சியை சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் ஊடாக ஒளிபரப்புவதற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ)(i) மற்றும் (ஆ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிகழ்ச்சிகளுக்காக பணம் செலுத்தியமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 20, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

731/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் நிலவுகின்ற வறட்சி காலநிலை மாறி மீள மழை பெய்யத் தொடங்கியதும் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் இதுவரை டெங்கு நோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) டெங்கு நுளம்புக் குடம்பிகளை ஒழிப்பதற்கு 2008/2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அரசாங்கத்தினால் B.T.I பக்றீரியாவை கியூபாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பலவேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கான சாத்தியம் தொடர்பாக ஆய்வு நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கு சாத்தியம் இல்லாத பட்சத்தில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) B.T.I பக்றீரியாவுக்குப் பதிலாக டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய மாற்றுவழி என்ன என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

933/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) எந்த வகையான விசேட தேவைகளுடைய மாணவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இந்த மாணவர்களுக்காக தற்போது இப்பாடசாலைகளில் காணப்படும் பௌதீக வளங்கள் மற்றும் பணியாட்குழுவினரின் எண்ணிக்கை போதியதாக இல்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) வட மாகாணத்துக்கு உரித்தான 12 கல்வி வலயங்களிலும் விசேட தேவைகளையுடைய மாணவர்களுக்காக, ஒரு கல்வி வலயத்துக்கு ஒரு கட்டிடம் வீதம் நவீன வசதிகளைக் கொண்ட கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1102/2020

கௌரவ ஜே.சீ.அலவத்துவல,— பெருந்தோட்டத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு ஏற்றுமதி பயிர் செய்கையாளர்கள் மத்தியில் இலங்கைக்கு அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஏலக்காய், கராம்பு மற்றும் மிளகு செய்கையாளர்கள் உள்ளனர் என்பதையும்;

(ii) ஏலக்காய், கராம்பு மற்றும் மிளகு முதலிய சிறு ஏற்றுமதிப் பயிர்களின் கொள்விலை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் இப்பயிர்ச்செய்கையாளர் களுக்கு அநீதி ஏற்படுகின்றதென்பதையும்;

(iii) கொள்விலை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் ஏலக்காய், கராம்பு மற்றும் மிளகுச் செய்கையாளர்கள் மேற்படி சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையை கைவிடுகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கொள்விலை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் ஏலக்காய், கராம்பு மற்றும் மிளகுச் செய்கையாளர்களுக்கு நிவாரண நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2031/2021

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்கென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டம் 2018.10.01 ஆந் திகதி தொடக்கம் மேற்படி சபையின் ஒட்டுமொத்த ஊழியர்களில் பெரும்பாலானோருக்கு மாத்திரம் செயற்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) நிறைவேற்று மற்றும் எழுதுவினைஞர் தரத்துடன் நேரொத்த தரங்களில் பணியாற்றுகின்ற இதர அலுவலர்களுக்காக 2018.10.01 ஆந் திகதி தொடக்கம் இதுவரை மேற்குறிப்பிட்ட சம்பள அளவுத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) அதனால் மேற்படி அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) நிறைவேற்று மற்றும் எழுதுவினைஞர் தரத்துடன் நேரொத்த தரங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்காக மேற்படி சம்பள அளவுத் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி அலுவலர்களுக்கு மேற்குறிப்பிட்ட சம்பள அளவுத் திட்டத்தை 2018.10.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2177/2021

கௌரவ காமினி வலேபொட,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பெருந்தோட்டக் கைத்தொழில் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவுகள் மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 நவம்பர் 22, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

177/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையின் பிரதான வைத்தியசாலையொன்றாகிய கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பதின்மூன்று மாடிகளைக் கொண்ட வாட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

313/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மன்னார் வடிநிலத்திற்கு அருகாமையில் பாரிய எண்ணெய் படிவு காணப்படுகின்றமை உறுதிசெய்யப்பட்ட வருடம் யாது;

(ii) மேற்படி படிவு தொடர்பில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக கையளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) மேற்படி கனிய எண்ணெய் மற்றும் எரிவாயு படிவுகளிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இதுவரையில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

506/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள கிராமங்களில் சுத்தமான குடி நீரைப் பெற்றுக்கொள்ளும் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த மாவட்டத்தல் தற்போது நடைமுறையிலுள்ள சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் கிராமங்களின் மற்றும் குடும்ப அலகுகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி சமுதாய நீர் வழங்கல் திட்டங்களில் காணப்படுகின்ற இயலளவை மேலும் அதிகரித்துக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1735/2021

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினதும் லக்ஹண்ட வானொலி சேவையினதும் புதிய சின்னங்களை ஊக்குவிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை மற்றும் லக்ஹண்ட வானொலி சேவைக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(ii) அந்த ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள், செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், வழங்கப்பட்ட ஏனைய வசதிகள் மற்றும் அவ்வொவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை;

யாதென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட ஆலோசகர்கள் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கும், லக்ஹண்ட வானொலி சேவைக்கும் வழங்கிய சேவை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1794/2021

கௌரவ றோஹண திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பல்கலைக்கழகங்களுடன் இணைந்ததாக அமைக்கப்பட்டுள்ள விவசாய பீடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்விவசாய பீடங்கள் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) விவசாயத்திற்கெனவே ஒதுக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், விவசாயத்திற்கென ஒதுக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 நவம்பர் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

459/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 13,200 லீற்றர் எரிபொருளை ஏற்றிச் செல்லக்கூடியவாறான கொள்ளளவுடன் கூடிய தாங்கிகளைக் கொண்டமைந்த 05 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் அமைச்சினால் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரத்தை கோரியவர்கள் யார்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரம் அப்போதைய உரிய அமைச்சின் பெறுகைகள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி 05 வாகனங்களையும் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை;

(ii) ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை;

(iii) மேற்படி வாகனங்கள் கொள்வனவு செய்யப்படும்போது வாகனமொன்றுக்கான சந்தைப் பெறுமதி;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

713/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான கைத்தறி நெசவுக் கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற உள்நாட்டு ஆடை வகைகள் யாவை என்பதையும்;

(iv) கைத்தறி நெசவுக் கைத்தொழிலுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) மேற்படி உற்பத்திகள் வெளிநாட்டுச் சந்தைக்கு விற்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

840/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டம் கைத்தறி நெசவுக் கைத்தொழிலுக்குப் பிரபல்யமானது என்பதையும்;

(ii) கைத்தறி நெசவுக் கைத்தொழிலின் மூலம் அதிகமான முதலீட்டு வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் சில கைத்தறி நெசவுக் கைத்தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) மேலே அ(ii) இல் குறிப்பிடப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை நேரடியாக கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1647/2021

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் சேரித் தோட்டங்களை சார்ந்ததாக 2020 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) கொழும்பு மாவட்டத்தில் சேரித் தோட்டங்களை சார்ந்ததாக பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1830/2021

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக கடந்த அரசாங்கத்தில் ஆளும் தரப்பைப் பிரதிநிதித்துவம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி செலுத்தலுக்கு சட்டரீதியான அடிப்படை உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி கொடுப்பனவைச் செலுத்திய அமைச்சின்/அலுவலகத்தின் பெயர் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நடப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேற்படி கொடுப்பனவைச் செலுத்துவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் இன்றளவில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 நவம்பர் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

74/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனினும், இதுவரை தீர்ப்பு வழங்கப்படாதுள்ள மனித உரிமை வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) உயர் நீதிமன்றத்தில் அத்தகைய வழக்கு ஒவ்வொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள திகதி தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அத்தகைய வழக்கு ஒவ்வொன்றுக்குமான வழக்கிலக்கம் மற்றும் மனுதாரர்கள் தனித்தனியாக யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

742/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள விகாரைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இம்மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் அமைந்துள்ள விகாரைகளில் பெருமளவு குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக இன்றளவில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் தொல்லியல் இடங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1404/2021

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் காணப்படும் உள்நாட்டு நெல் வகைகளின் பெயர்கள்;

(ii) இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான உள்நாட்டு நெல் வகைகளின் பெயர்கள்;

யாவையென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரம்பரிய நெல் வகைகளைப் பயிரிடுவதற்கு உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் தேவையில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பாரம்பரிய நெல் வகைகளைப் பேணுவதற்கும் பயரிடுவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது இலங்கையில் சிறுநீரகநோய் மற்றும் புற்றுநோய் என்பன அதிகமாக காணப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) மரபணு மாற்றப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள இலங்கைக்கு தனித்துவம் அல்லாத நெல் மற்றும் விதை வகைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற உணவுகளைப் பயன்படுத்துவது இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதென ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1421/2021

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலயத்தில் (ஆண்கள்) முதலாவது 'ஸ்மார்ட் வகுப்பறை' முன்னோடிக் கருத்திட்டம் 2017.01.13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) அன்றிலிருந்து, இந்த முன்னோடிக் கருத்திட்டத்தை விஸ்தரிப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைக்கு அனைத்து தரங்களுக்குமான 'ஸ்மார்ட் வகுப்பறைகளை' நிறுவ முடிந்தது என்பதையும்;

(iv) ஏனைய பாடசாலைகளும் அரசாங்க நிறுவனங்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவுகளை மதிப்பீடு செய்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட பாடசாலையில் உள்ள தரங்கள், வகுப்புகள் மற்றும் 'ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கு' சேர்க்கப்பட்ட மாணவர்களை வெவ்வேறாகவும்;

(ii) இந்தப் பாடசாலையில் 'ஸ்மார்ட் வகுப்பறைகளை' விஸ்தரிப்பதற்கான திட்டங்களையும்;

(iii) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) 2022 ஆம் ஆண்டில் மேற்படி பாடசாலை அதன் 200 ஆவது ஆண்டுநிறைவு விழாவை கொண்டாடும் போது அதனை ஒரு தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தி இலங்கையின் முதலாவது ஸ்மார்ட் பாடசாலையாக மாற்ற முடியுமா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2265/2021

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராகம பிரதேசத்தில் அழகியற் கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்று அமைந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்கல்லூரிக்குச் சொந்தமான காணியின் அளவு மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கல்லூரியில் கல்வி பயின்ற ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) தற்சமயம் மேற்படி கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி கல்லூரி பயன்படுத்தப்படாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இங்கு பாடசாலையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், மேற்படி வளவு மற்றும் கட்டிடங்கள் தொடர்ந்தும் கைவிடப்பட்ட நிலையில் விடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

647/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய் மற்றும் கவுடுள்ள நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்காமல் மேல் எலஹர அணைக்கட்டின் ஊடாக நீரைக் கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஜனரஞ்சன வாவிக்கு அருகில் மகாவலி கங்கையின் நீரை இறைப்பதன் மூலம் மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீர் கந்தளாய் மற்றும் கவுடுள்ள நீர்த்தேக்கங்களுக்கு அனுப்பப்படுகின்றதென்பதையும்;

(iii) கந்தளாய் மற்றும் கவுடுள்ள நீர்த்தேக்கங்கள் சுமார் 25 மீற்றர் உயரத்திலும் நீரேற்று நிலையத்திலிருந்து சுமார் 60கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளதால் இந்த நீர்த்தேக்கங்களினால் போசிக்கப்படும் சுமார் 2500 ஏக்கர் பயிர்நிலங்களுக்கு நீரை இறைப்பதற்காக வருடாந்தம் சுமார் ரூ.600 மில்லியன் செலவு ஏற்படுகின்றதென்பதையும்;

(iv) வேமெடில்ல நீர்த்தேக்கத்திலிருந்து வடமேல் மாகாணம் வரையிலான நீரேந்துக் கால்வாயை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தில் தாமதம் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நீரேந்துக் கால்வாயின் நீர், உத்தேச மட்டத்தை அடையுமென உத்தரவாதம் அளிப்பாரா;

(ii) இன்றேல், தெதுறு ஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டத்தைப் போன்று இக்கருத்திட்டமும் முடிவுறுத்தப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

768/2020

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை இலங்கைக்கு இன்றியமையாத ஒரு சாலை என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) மேற்படி சாலையின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஒவ்வொரு கட்டப் பணிகளும் நிறைவு செய்யப்படுகின்ற திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி சாலையின் மூன்றாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி சாலையின் மூன்றாம் கட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

793/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் பாடசாலை மாணவ - மாணவிகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் அரச பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கையில் ஆசிரியர் - மாணவர் விகிதம் யாதென்பதையும்;

(iv) ஆசிரியர் சமநிலை உருவாகும் வகையில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையொன்றை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1401/2021

கௌரவ டப்ளியூ. எச். எம். தர்மசேன,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குரங்குகள், மந்திகள் மற்றும் மர அணில்கள் போன்ற விலங்குகளினால் தெங்குச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பானது தேங்காய் விலை அதிகரிப்பதன் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(ii) மந்திகளின் சடுதியான வியாபித்தல் காரணமாக தென் மற்றும் ஊவா மாகாணங்களில் வீட்டுத் தோட்டம் சார்ந்த தெங்குச் செய்கையாளர்கள் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந்த விலங்குகளின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக;

(i) மலடாக்கல் முறையியலைக் கையாள முடியாதா என்பதையும்;

(ii) உணவில் கலந்த ஹார்மோன் சிகிச்சை முறையைக் கையாள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) காற்றழுத்தத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி ஊசி மருந்தேற்றுவது தொடர்பில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1918/2021

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

276/2020

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் வாழைப்பழ உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வாழைப்பழ உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள வாழை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் வாழைச் செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை வாழைப் பழங்களை இறக்குமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வாழைப் பழங்களை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வாழைப்பழ ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

804/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்திற்கென இதுவரை பிரதான பஸ் தரிப்பிடமொன்று இல்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) கிளிநொச்சி பிரதான பஸ் தரிப்பிடத்திற்கான —

(i) நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

(ii) நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணம் யாது;

(iii) நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iv) நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பஸ் தரிப்பிடத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் எவ்வளவு;

(ii) அந்த நிதி ஏற்பாடுகளுக்கு அமைவாக வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பஸ் தரிப்பிட நிர்மாணம், கரச்சி பிரதேச சபையின் எதிர்காலத் திட்டங்களுக்கு இயைபானதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பஸ் தரிப்பிட நிர்மாணத்திற்கு இணையாக வீதியை அகலப்படுத்தல், சுற்று வட்ட நிர்மாணம் மற்றும் கடைத் தொகுதி நிர்மாணம் போன்ற முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல் ஏன்?

1394/2021

கௌரவ திலிப் வெதஆரச்சி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையானது பன்னிரண்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய போதிலும், இச்சங்கத்தின் அதிகாரத்தை பணிப்பாளர் சபையின் மூன்று உறுப்பினர்கள் பலவந்தமாக கைப்பற்றியுள்ளரென்பதையும்;

(ii) தங்காலை பிரதேச செயலகத்தில் இணைந்து கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் இதில் தொடர்புபட்டிருக்கின்றார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக பொலிஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் (தென் மாகாணம்) இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட தங்காலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பணத்திற்கு பொறுப்புக்கூறும் தரப்பினர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1737/2021

கௌரவ திஸகுட்டி ஆரச்சி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுயாதீன தொலைக்காட்சிச் சேவை வசம் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் இருந்தவேளையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அந்நிறுவனத்தினால் தனியார் வாகனங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தனியார் வாகனங்கள் வாடகைக்குப் பெறப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1987/2021

கௌரவ சந்திம வீரக்கொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் (சமுத்திரப் பல்கலைக்கழகம்) காலி பிரதேச அலுவலகத்திற்காக பூஸ்ஸ பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா;

(ii) இல்லையெனில், மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளனவா;

(iii) மேற்படி காணியில் 1.47 ஹெக்டேர்களை வேறு ஏதேனும் நோக்கத்திற்காக நிறுவனமொன்றுக்கு கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கையளித்தல் ஆனது தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தை முன்னேற்றுவதற்கு முக்கியமாக அமைகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 27, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

864/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராகவும் அமைந்துள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்குரிய அரச ஒசுசல மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அரச ஒசுசல மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்கள் இருப்பின், அம்மாவட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் குறைந்த தரத்திலான மற்றும் காலாவதியான மருந்துகள் அரச ஒசுசல மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) 2015 தொடக்கம் 2019 வரை அரச ஒசுசல மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த குறைந்த தரத்திலான மற்றும் காலாவதியான மருந்துகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) (i) அரச ஒசுசல மருந்தகங்களுக்கு காலாவதியாகிய மருந்துகள் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளின் பெறுமதியை உரிய வழங்குநர்களிடமிருந்து அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உரிய பெறுமதி அறவிடப்படாத வழங்குநர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

975/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மலைநாட்டு பெருந்தோட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்களில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு “பெருந்தோட்ட வலயத்துக்கான புதிய கிராமங்கள் அதிகாரசபை” நிறுவப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தின் நிருவாகக் கட்டமைப்பு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் நோக்கங்களும் செயற்பாடுகளும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்துக்கு இன்றளவில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நபருக்கும் நியமனம் வழங்குகையில் கவனத்தில் கொள்ளப்பட்ட தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திட்டங்கள் தொடர்பாக விபரிக்க முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1209/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தேயிலைப் பரிசோதகர்களுக்கான பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(ii) இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தேயிலைப் பரிசோதகர் பிரிவுகள் 25 இல் 8 பிரிவுகளில் தேயிலைப் பரிசோதகர்கள் இல்லையென்பதையும்;

(iii) இதன் காரணமாக தேயிலைப் பரிசோதகரொருவர் பல பிரிவுகளின் பணிகளையும் உள்ளடக்கிப் புரிய வேண்டியுள்ளதால் பணிகள் உரியவாறு இடம்பெறுவதில்லை என்பதையும்;

(iv) தேயிலை மீள் நடுகைக்காக ஹெக்டயர் ஒன்றுக்கு வழங்ப்படுகின்ற ஐந்து இலட்சம் ரூபா மானியத் தொகையானது போதுமானதாக இல்லையென்பதையும்;

(v) இடைநடுகை தேயிலைச் செடியொன்றிற்காக வழங்கப்பட்ட 25 ரூபா மானியத் தொகையானது கடந்த அரசாங்கத்தினால் 100 ரூபா வரை அதிகரிக்கப்பட்டது என்பதையும்;

(vi) அவ்வாறு அதிகரிக்கப்பட்ட பணத்தொகை மற்றும் தேயிலை மீள் நடுகைக்காக வழங்கப்படுகின்ற மானியத்தொகை தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்படுவதில் பாரிய தாமதம் நிலவுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேலே (iv) இல் குறிப்பிட்ட மானியத் தொகையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1291/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்து சாலைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு சாலைகளிலும் போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

(iv) மேற்படி ஒவ்வொரு சாலைகளிலும் நிலவுகின்ற ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் மூலமாக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2197/2021

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் காணி பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 நவம்பர் 29, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

294/2020

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பன் உற்பத்தி கைத்தொழிலாளர்கள் இன்றளவில் அக்கைத்தொழிலை விட்டு ஒதுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதிலும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிலின் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையின் பன் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டில் அதன் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டு வருமானம் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் பன் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படாத பட்சத்தில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையில் பன் உற்பத்திகளுக்கென சந்தையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

874/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பாகிஸ்தான், நேபாளம், பங்காளதேசம், மாலைதீவு மற்றும் மியன்மார் ஆகியவற்றை உள்ளிட்ட 80 நாடுகள் கொவிட் - 19 தொற்றின் பொருளாதாரத் தாக்கத்தை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) அவசர உதவிகளைப் பெற்றிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம், கொவிட் - 19 தொற்று காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைக் கோரியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கோரப்பட்டுள்ள உதவியின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட உதவி கோரப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம் பதிலளித்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சர்வதேச நாணய நிதியத்தின் பதிலையும்;

(vi) இதுவரை நிவாரணத்தைப் பெற்ற 80 நாடுகள் போலல்லாது இலங்கை அரசாங்கம் நிவாரணத்தைப் பெற்றிருக்காமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

981/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய மன்னார் மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுவாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மன்னார் மாவட்டத்தில் மாடு வளர்ப்பிற்கு போதியளவு மேய்ச்சல் நிலங்கள் காணப்படாமையால் உணவு பற்றாக்குறையினால் இந்த விலங்குகள் உயிரிழக்கின்றன என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மன்னார் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் காலப்பகுதியில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் அற்றுப் போவதனால் இக்காலப்பகுதியில் மாடு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமது மாடுகளை கொண்டுச் செல்லக்கூடிய ஏனைய பிரதேசங்கள் யாவை;

(ii) மன்னார் மாவட்டத்துக்கு உரித்தான பிரதேச செயலகப் பிரிவுகளில் மேய்ச்சல் நிலங்களுக்கான காணிகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) ஆமெனில், மேற்கொள்ளப்படும் காலகட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1281/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொனராகலை, செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர அல்லது தற்காலிக வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்படும் காணிகளுள் காணி அமைச்சிற்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத காணிகளில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வீடுகளை அமைத்து அவற்றில் குடும்பங்கள் குடியிருப்பதனை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்படி குடும்பங்கள் குடியிருக்கும் காணிகளுள் காணி அமைச்சிற்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) அனுமதிப்பத்திரம் இல்லாத காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1928/2021

கௌரவ எச். நந்தசேன,— பிரதம அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கலை மன்றத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 நவம்பர் 30, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

819/2020

கௌரவ சாந்த பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்திற்கு பாசன வசதியை வழங்கும் நோக்கத்துடன் வடமேல் நீர்ப்பாசனக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(iii) மேற்படி நிதி திரட்டப்படும் மூலாதாரம் யாது;

(iv) மேற்படி கருத்திட்டம் பொல்பித்திகம, சியம்பலன்கமுவ வாவிக்கு நீரைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு திட்டமிடப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், இதற்குத் தேவையான மேலதிக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1428/2021

கௌரவ வடிவேல் சுரேஷ்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தோட்டப்புறங்களில் வாழும் மக்களின் சமய, கலாசார, நலனோம்புகை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பதுளை மாவட்டத்தில் தோட்டப்புற பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கி இதற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததென்பதையும்;

(ii) இதில் 14 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க பணிகளுக்கென ரூபா 20.5 மில்லியன் பதுளை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1594/2021

கௌரவ இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எவ்வித ஆவணமும் இன்றி அரச காணிகளை கையகப்படுத்தி அவற்றை அபிவிருத்தி செய்தவர்களுக்கு சட்ட ஆவணங்கள் வழங்குவதை விரைவுபடுத்தும் வகையிலான 2020.09.10 ஆம் திகதிய 2192/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையானது 2020.09.22 ஆம் திகதிய 2194/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையால் 12 நாட்களில் செல்லுபடியற்றதாக்கப்பட்ட தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், 2020.09.10 ஆம் திகதிய 2192/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் கீழ் —

(i) மாவட்ட ரீதியாக கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) அவ் விண்ணப்பங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையையும்;

(iii) 2020.09.10 ஆம் திகதி தொடக்கம் 2020.09.22 ஆம் திகதி வரை வழங்கிய உறுதிகள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சட்ட ஆவணங்களின் எண்ணிக்கையையும்;

(iv) ஒவ்வொரு பயனாளியினது பெயர், முகவரி மற்றும் ஒதுக்கப்பட்ட காணியின் அளவையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1689/2021

கௌரவ குமார வெல்கம,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உரித்துறுதி இல்லாத காணிகளில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அக்குடும்பங்களுக்காக உரித்துறுதி வழங்கும் முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருப்பின், அம்முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான போதிலும் இதுவரை பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அக்காணிகளை அரசின் பொதுப் பணிகளுக்கோ அல்லது காணிகளற்ற மக்களுக்கு வழங்குவதற்கோ அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கோ வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2975/2021

கௌரவ அசோக்க பிரியந்த,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சபையின் கீழுள்ள சகல நிறுவனங்களிலும் தற்போது ஒப்பந்த மற்றும் அமய அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 டிசம்பர் 01, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

316/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முடிவு வரையில் கனிய எண்ணெய் கொண்டு செல்லப்படும் குழாய் முறைமை மிகவும் பழைமையானது என்பதையும்;

(ii) இதன் காரணமாக பாரியளவில் மோசடிகள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி குழாய் முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

867/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 ஆம் ஆண்டு வரை செயற்பட்டு வந்த திருகோணமலை மாவட்டத்தில் அமையப்பெற்றிருந்த கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், வடகிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டது என்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை நீதிமன்ற செயற்பாடுகளை அரசாங்கக் கட்டிடமொன்றில் தற்காலிகமாக மீள ஆரம்பிப்பதற்கு கடந்த வருடம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திருகோணமலை நிதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கிண்ணியா பிரதேச மக்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கென திருகோணமலை வரை செல்லும்போது ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைப்பதற்கும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1293/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள அரச நெற் களஞ்சியங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி ஒவ்வொரு களஞ்சியங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அரிசியின் விலை அதிகரித்த சந்தர்ப்பங்களில் மேற்படி களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல்லை அரிசியாக மாற்றி சந்தைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1623/2021

கௌரவ உத்திக பிரேமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) அநுராதபுரம், மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவின், எலபத்கம கிராமத்தை மையமாகக் கொண்டு “சங்கைக்குரிய மாதுளுவாவே சோபித தேரர் கிராமம்” எனும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதி ஒதுக்கிய மூலம் யாது;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை செலவிட்டது யார்;

(iii) மேற்படி நிதி செலவிடப்பட்ட முறை யாது;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் இன்றைய பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பற்றிய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா;

(v) தற்போது இடைநடுவே கைவிடப்பட்டுள்ள மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா;

(vi) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2273/2021

கௌரவ டீ. வீரசிங்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வெகுசன ஊடக விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 டிசம்பர் 02, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

460/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலோசகர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்சேர்ப்புக்கு அனுமதி கிடைத்திருந்ததா என்பதையும்;

(iv) வேறு ஒரு தரப்பினரால் வழங்கப்பட்ட ஒரு ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி ஆவணத்தை வழங்கிய தரப்பின் பெயர் யாதென்பதையும்;

(vi) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகளின் மொத்தம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

714/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காணிகளில் குடியிருக்கும் குடும்ப அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) மேற்குறிப்பிட்ட குடும்ப அலகுகளுக்கு சட்ட ரீதியான உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், வழங்கப்பட்டுள்ள உறுதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) உறுதிகள் வழங்க வேண்டிய போதும் இதுவரையும் உறுதிகள் வழங்கப்படாத குடும்ப அலகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) காணி உறுதிகள் இல்லாத குடும்ப அலகுகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

745/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்னேவ பொலிஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை மேற்படி கட்டிடங்கள் போதுமான வகையில் சீரமைக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் எத்திகதியில் சீரமைக்கப்படுமென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

992/2020

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய பொருட்கள் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாமல் அநுராதபுர மாவட்டத்திற்கான பிரதேச செயலகங்களில் வைக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அமைச்சு இது தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1938/2021

கௌரவ கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொதுத் திறைசேரியில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 டிசம்பர் 03, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

77/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "கமட்ட சவிய – சதொச படிய" எனும் நடமாடும் விற்பனை வேலைத்திட்டம் இன்றளவில் நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான தேவை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பார?

(ஆ) (i) மேற்படி வேலைத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்ட காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்திற்காக உறப்பட்ட மொத்தச் செலவினம் எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

616/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலப்பகுதியில் பாதுகாப்புச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கூட்டங்களில் பங்கேற்றோர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பாதுகாப்புச் சபை கூட்டங்களில் சட்ட ரீதியாக பங்கேற்பதற்கு உரித்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காணப்பட்ட சம்பிரதாயத்துக்கு முரணாக மேற்படி காலப்பகுதியில் பல்வேறு நபர்கள் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

976/2020

கௌரவ வேலு குமார்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விக்டோரியா நீர் மின் திட்டத்திற்காக விக்டோரியா நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டபோது அப்போதைய தெல்தெனிய நகரம் அதில் மூழ்கியதென்பதையும்;

(ii) அதற்கு மாற்றாக திகன, இரஜவெல்ல வடக்கு 696 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் திகன, இரஜவெல்ல புதிய நகரமானது நிறுவப்பட்டதென்பதையும்;

(iii) அந் நகரம் பிற்காலத்தில் பல்வேறு விரிவாக்கல் மற்றும் மாற்றங்களுக்கு உட்பட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி நகரம் நிறுவப்பட்ட ஆரம்பத்தில், அங்கு நிர்மாணிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந் நகரில் இன்றளவில் காணப்படுகின்ற வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவற்றுக்கு மத்தியில் உரிமம் வழங்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) உரிமம் இல்லாத வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) உரிமம் இல்லாத வர்த்தக நிலையங்களுக்கு உரிமத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1405/2021

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் —

(i) அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டையும் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் (உதாகம்) எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) நிர்மாணிக்கப்பட்ட ஒவ்வொரு உதாகம வீடமைப்புத் திட்டத்தினதும் திறப்பு விழாவிற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் —

(i) நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களின் பெயர்ப் பலகைகளுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட சீமெந்து மூடைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் சீமெந்து மூடைகள் விநியோகிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2598/2021

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 டிசம்பர் 04, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

972/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு பீ/17 இல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் பயிர்ச்செய்கைகள் தொடர்ச்சியாக காட்டு யானைகளினால் அழிக்கப்படுகின்றதென்பதையும்;

(ii) காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்கின்ற பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்வதை விரும்பவில்லை என்பதையும்;

(iii) பிரதேசத்தின் யானை வேலிகள் காட்டு யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) யானை வேலியை அமைத்துத் தருமாறு உரிய உத்தியோகத்தர்களிடம் கோரியபோதிலும், இதுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை என்பதையும்;

(v) இதன் காரணமாக இம்மக்களுக்கு தமது பிரதேசத்தை விட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1088/2020

கௌரவ நிரோஷன் பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதுவரை சிறைச்சாலைகளில் இனங்காணப்பட்டுள்ள மொத்த கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை;

(ii) அதில் கொவிட்-19 தொற்றியுள்ள கைதிகளின் எண்ணிக்கை மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

(iii) கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக சிறைச்சாலையினுள் இறந்துள்ள நபர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட்-19 தொற்றுநோய் சிறைச்சாலையினுள் பரவுவதனை தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1103/2020

கௌரவ ஜே.சீ.அலவத்துவல,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, லீசிங் அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்தவர்களுக்கு தமது லீசிங் தவணைகளைச் செலுத்துவதற்கென 2020 மார்ச் மாதம் தொடக்கம் 06 மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) லீசிங் நிறுவனங்கள் லீசிங் அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்தவர்களிடமிருந்து மேற்படி சலுகை காலத்திற்காக கூடுதல் வட்டியை அறவிட்டுள்ளன என்பதையும்;

(iii) கொவிட்-19 தொற்றுநோயின் இரண்டாம் பரவல் காரணமாக, லீசிங் தவணைகளை செலுத்துவதற்கு 2020 ஒக்டோபர் தொடக்கம் மீண்டும் 06 மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்ட சலுகைக் காலத்திற்கும் லீசிங் அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்தவர்களிடமிருந்து முதலாவது தடவை மேற்கொள்ளப்பட்டதைப் போன்று வட்டி அறவிடுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) முதலாவது சலுகை காலத்திற்காக வட்டி அறவிடப்பட்டமையால் ஏற்பட்ட அநீதி நிவர்த்தி செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1334/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அரச ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் தற்போது பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் நிலவும் மருத்துவர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) ஏனைய பதவிகளுக்கான வெற்றிடங்களினதும் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களது அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) புதிய பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர்களை பதிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவக் கல்வியை கற்பிப்பதற்காக மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படித் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படும் ஆயுர்வேத மூலிகைத் தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள மூலிகைத் தோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சுதேச மூலிகைகளின் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கென ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1989/2021

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 டிசம்பர் 06, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

444/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் எனும் பெயரில் நிறுவனமொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் தொலைநோக்கு, பணி மற்றும் செயற்பாடுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பகிர்ந்தளிக்கும் போது அந்நிறுவனம் ஊழல்களிலும் மோசடிகளிலும் ஈடுபடுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி ஊழல் மற்றும் மோசடிகளை தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1422/2021

கௌரவ (டாக்டர்) ஹர்ஷ த சில்வா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017 ஒக்டோபரில் எல்லாப் பாடசாலைப் பிள்ளைகளுக்காகவும் முன்னைய அரசாங்கம் ஆரம்பித்த 'சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டமானது', 2020 இல் தற்போதைய அரசாங்கத்தால் மீண்டும் செயற்படுத்தப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தக் காப்புறுதித்திட்டம் மீண்டும் அமுலுக்கு வந்த திகதியையும்;

(ii) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்தக் காப்புறுதித்திட்டம் இல்லாமல் போயிருந்ததா என்பதையும்;

(iii) இந்தக் காப்புறுதித்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் கம்பனியின் பெயர் மற்றும் செல்லுபடியாகும் திகதியை தனித்தனியாகவும்;

(iv) ஒவ்வொரு ஒப்பந்ததமும் எவ்வாறான முறையில் வழங்கப்பட்டது என்பதைத் தனித்தனியாகவும்;

(v) வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தின் பெறுமதியை தனித்தனியாகவும்;

அவர் இந்த சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2020 இல் வழங்கப்பட்ட 'சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டத்தில்' உள்ளடக்கப்பட்டிருந்த சம்பவங்கள் விடயத்தில் ஏதும் பாரிய விலகல்கள் இடம்பெற்றதா என்பதையும் அவர் இந்தச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1440/2021

கௌரவ அமரகீர்த்தி அதுகோரல,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் இயங்கும் ஒவ்வொரு டிப்போவிலும் —

(i) பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) குறுந்தூர மற்றும் நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பேரூந்துகளின் எண்ணிக்கை;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் பெற்ற வருமானம்;

என்பன வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் இயங்கும் உப டிப்போக்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) தியசென்புர உப டிப்போ பிரதான டிப்போவாக தரமுயர்த்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1441/2021

கௌரவ மனுஷ நாணாயக்கார,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சு செயலாளர்கள்;

(ii) அரச கூட்டுத்தாபன தலைவர்கள்;

(iii) அரச திணைக்களத் தலைவர்கள்;

(iv) அரச நிறுவனங்களின் தொழிற்பாட்டுப் பணிப்பாளர்கள்;

(v) அரசாங்க பொறுப்பு முயற்சிகளின் தலைவர்கள்;

(vi) அரச நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களாக;

இன்றளவில் பணியாற்றும் முனைப்பான சேவையின் அல்லது ஓய்வு நிலை, இராணுவ அல்லது பொலிஸ் சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு அமைச்சினதும் செயலாளர்/கூட்டுத்தாபன தலைவர்/ திணைக்களத் தலைவர்/தொழிற்பாட்டுப் பணிப்பாளர்/அரசாங்க பொறுப்பு முயற்சிகளின் தலைவர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் பெயர், அவர் பணியாற்றும் ஒவ்வொரு அமைச்சு/கூட்டுத்தாபனம்/திணைக்களம்/ நிறுவனத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1795/2021

கௌரவ ரோஹண திஸாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் விவசாயத் தொழில்துறையை நவீனமயப்படுத்தும் கருத்திட்டமொன்று கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக கிடைத்துள்ள உதவித்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட இடங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) குறித்த வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(vi) மேற்படி வேலைத்திட்டங்கள் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்குச் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2021 டிசம்பர் 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

466/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையின் தொழிலின்மை விகிதம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிலின்மை விகிதத்தின் வேறுபாடு யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையின் நீண்டகால உற்பத்தி இயலளவில் நிகழ்ந்த வேறுபாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

794/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டதிலுள்ள கிராமங்களுக்கு மத்தியில் குடிநீர்ப் பிரச்சினை காணப்படும் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மாத்தளை மாவட்டத்தில் காணப்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

841/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் பிரதேசத்தில் அமைந்துள்ள ஓட்டுத் தொழிற்சாலை மிக நீண்ட காலமாக தொழிற்படும் நிலையில் இல்லை என்பதையும்;

(ii) குறித்த ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதன் மூலம் மண்டூர் பிரதேசத்தில் தொழில் வாய்ப்பின்றி உள்ள மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) குறித்த ஓட்டுத் தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1104/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாவத்தகம - பரந்தன வீதிக்கு காப்பட் இடும் கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2610/2021

கௌரவ மர்ஜான் பளீல்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 டிசம்பர் 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

514/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக புதிய சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கை தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

807/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நாடெங்கிலும் அமைந்துள்ள பாடசாலைகளில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்கள் மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிபர்களுக்கு சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) பொதுச் செயன்முறையின் கீழ் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணியாற்றுகின்ற அதிபர்கள் நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படுகின்ற போதிலும் தற்பொழுது இவர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அதிபர்களை நிரந்தரச் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

858/2020

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தல் காலத்தில், அரசியல் நட்பு அடிப்படையில் சமுர்த்தி இயக்கத்தின் நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் சமுர்த்தி வங்கி பணியாட்டொகுதியினருக்கு அரசியல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் சட்டத்திற்கு முரணானதென தேர்தல் ஆணைக்குழுவினால் அப்போதைய அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக நடப்பு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015.01.12 முதல் 2015.06.26 வரையான காலப்பகுதியில் சமுர்த்தி விடயத்திற்குப் பொறுப்பாக பணியாற்றிய அமைச்சர் ஒரு இலட்சம் ரூபா கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு வழங்கப்பட்ட கடன்களில் இதுவரை அறவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலும் அறவிடப்படுவதற்கு மீதியுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

மாவட்ட அடிப்படையில் தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) அப்போதைய அரசாங்கம் அரசியல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் இக்கடனை வழங்கியுள்ளது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இவ்வாறு தவறான முறையில் கடன் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

1420/2021

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் தெல்தெணிய கல்வி வலயத்தில் அமைந்துள்ள க/தெல்/ நாமகள் தமிழ் வித்தியாலயத்தில் பதிற் கடமையாற்றும் அதிபராக சேவையாற்றிய திரு. டி. சசிகுமார் அவர்கள் கஷ்டப் பிரதேச பாடசாலையொன்றுக்கு சாதாரண ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் திரு. சசிகுமார் அவர்களை மீளவும் சேவையில் அமர்த்துமாறு பரிந்துரை செய்யப்பட்டதுடன் அதற்கமைவாக அவர் தெல்தெனிய நவநகல தமிழ் வித்தியாலயத்தின் பதிற் கடமை அதிபராக மீளவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) இதுவரை அவருக்கு கடமைகளோ அல்லது அலுவலகமோ ஒப்படைக்கப்படவில்லை என்பதையும்;

(iv) தற்போது ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் மேற்குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. சசிகுமார் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பில் நியாயத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2001/2021

கௌரவ நிமல் பியதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மீளாய்வுச் சபையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 டிசம்பர் 09, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

821/2020

கௌரவ சாந்த பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பிரஜைகள் வெளிநாடுகளில் பணியாற்றுவதன் வழியாக இலங்கைக்கு அதிகளவிலான அந்நியச் செலாவணி கிடைக்கின்றது என்பதையும்;

(ii) வீட்டுப் பணிகளுக்காக இன்றளவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

(iii) பயிற்சிபெறாத பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக பயிற்சி பெற்ற ஆண் ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபடுத்துவது பொருத்தமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வீட்டுப் பணிகளுக்காக இன்றளவில் வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ள பெண்களின் எண்ணிக்கை யாது;

(ii) பயிற்சிபெற்ற ஆண் ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) அவர்களை ஈடுபடுத்துவதற்காக இன்றளவில் அடையாளங்காணப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1233/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்திலுள்ள தொல்பொருள் இடங்களின் பெயர்கள் ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தொல்பொருள் திணைக்களத்தினால் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக வட மாகாணத்தில் சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு, அக்காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் அக்காணிகள் சுவீகரிக்கப்பட்ட வருடங்கள் ஆகியன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வவுனியா மாவட்டத்தின் வவுனியா-வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குரிய நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்குநாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இந்து பக்தர்களால் புராதன காலம் தொட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

(ii) ஆயினும், கடந்த 2 ஆண்டுகளாக தொல்பொருள் திணைக்களம் மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தினை நடத்தவிடாமல் தடைசெய்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) எதிர்வரும் காலங்களில் மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தினை நடாத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1648/2021

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் இயங்கிவரும் சிறிய மகப்பேறு வைத்தியசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி மகப்பேறு வைத்தியசாலைகளில் பிணியாய்வுக்காக வருகை தரும் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்படும் திரிபோஷா வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நடாத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்வரும் காலத்தில் வெற்றிகரமாக கொண்டு நடாத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1860/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு 200 புலனாய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும்;

(ii) 2018.10.27 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு சுமார் 10,000 விண்ணப்பதாரிகள் தோற்றியதாகவும்;

(iii) ஒரு விண்ணப்பதாரியிடமிருந்து பரீட்சைக் கட்டணமாக ரூ. 750/- அறவிடப்பட்டது என்பதையும்;

(iv) பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 408 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர் என்பதையும்;

(v) நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 விண்ணப்பதாரிகளின் பாதுகாப்புத் தடைநீக்கச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள போதிலும் இது வரையில் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதையும்;

(vi) மேற்குறித்த ஆட்சேர்ப்புச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு தற்போது இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளதுடன் ஆட்சேர்ப்புத் தொடர்பான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 1½ வருடங்கள் கழிந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறித்த புலனாய்வு உத்தியோகத்தர்கள் விரைவில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2011/2021

கௌரவ மதுர விதானகே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 டிசம்பர் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

325/2020

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

833/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அனுமதிப்பத்திரம் பெற்று நடாத்திச் செல்லப்படுகின்ற மதுபான உற்பத்திச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வுற்பத்திச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வுற்பத்திச்சாலைகள் நடாத்திச் செல்லப்படுகின்ற இடங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட மதுபான உற்பத்திச்சாலைகளுள் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூடப்பட்டுள்ள மதுபான உற்பத்திச்சாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த உற்பத்திச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு மூடப்பட்ட உற்பத்திச்சாலைகளில் மீண்டும் மதுபான உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1082/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை;

(iii) குறித்த ஊழியர்களில் இது வரையில் கொவிட்-19 நோய் தொற்றியுள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கொவிட்-19 நோய் தொற்றியுள்ளமையானது அந்நாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவாரா?

(ii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2266/2021

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிலிமத்தலாவை, கிராகம பிரதேசத்தில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான பாரியதொரு கட்டிடம் அமைந்துள்ளதா என்பதையும்;

(ii) அரசாங்கத்திற்குச் சொந்தமாகவிருந்த மேற்படி கட்டிடத்தின் உரிமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கட்டிடம் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் வருடாந்த குத்தகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கட்டிடம் மற்றும் அதற்குச் சொந்தமான ஆதனங்கள் தனியார் துறைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vi) மேற்படி கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கைத்தொழில் விடயத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட அமைச்சரின் பெயர் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தினையும் அதற்குச் சொந்தமான ஆதனங்களையும் மீண்டும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப் படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி புடவைக் கைத்தொழில் நிலையத்தினால் யட்டிநுவர பிரதேசத்தில் வேலைவாய்ப்பற்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கட்டிடத்தை மீண்டும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்று யட்டிநுவர பிரதேசத்தில் புடவைக் கைத்தொழில் துறையை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2485/2021

கௌரவ லலித் எல்லாவல,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் திரு. ரோஹண விஜேவீர அவர்களை 1989.11.12 ஆம் திகதி அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் கைது செய்து அது தொடர்பாக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தியது என்பதையும்;

(ii) 1989.11.13 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் மரணம் இயற்கை மரணமா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஒரு படுகொலையா என்பதையும்;

(iii) படுகொலை எனின், அது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?